1997 மார்ச் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேச்சுரிமை இல்லாத பேரவைத் தலைவர் தொகுதி என்ற காரணத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கனிவோடு இந்தப் பிரச்சினையை அணுக வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த 2 கோடி ரூபாய் திட்டத்தில் அதை இடையிலே இணைத்து குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைப்பதற்கு ரொம்ப சிரமப்பட்டேன் ; அதுவும் உங்களால்தான். நீங்கள்தான் ஆரம்பத்திலே என்னிடத்திலே அதை தெரிவித்தீர்கள். அந்த அடிப்படையிலே தெரிவித்து இருக்கிறேன். அரசின் நிலையும் மாநகராட்சி நிலையும் இந்த நிதிநிலை அறிக்கையில் எந்த அளவுக்கு இருக்கிறது என்பது தங்களுக்குத் தெரியாத அளவுக்கு எனக்குத் தெரிவதில்லை. ஆகையினால், அதை சீர் செய்துகொண்டு, இந்தப் பணியைப்பற்றி யோசிக்கலாம் என்றுதான் தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 190, திரு. எல். சந்தானம், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

190—

மண்டல மாணிக்கம் அணைக்கட்டு கட்டுதல்

***2174—திரு. எல். சந்தானம் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் தொகுதியில் உள்ள மண்டல மாணிக்கம் அணைக்கட்டு கட்டி முடிக்கப்படாததால் விவசாயிகள் பாதிக்கப்படுவது அரசிற்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது கட்டி முடிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்கள் அனுமதியோடு இந்தக் கேள்வியிலே ஒரு திருத்தம். இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் தொகுதியில் உள்ள மண்டல மாணிக்கம் அணைக்கட்டு கட்டி முடிக்கப்படாததால் விவசாயிகள் பாதிக்கப்படுவது அரசிற்கு தெரியுமா ? ஆம் எனில், அது எப்போது கட்டி முடிக்கப்படும் என்று கேள்வி கேட்டு இருக்கிறார்.

[1997 மார்ச் 13

(அ) மற்றும் (ஆ): அணைக்கட்டு கட்டி முடிக்கப்பட்டது. முதுகுளத்தூர் தொகுதியிலே குண்டாற்றின் குறுக்கே 1974-ல் 8 லட்சம் ரூபாயில் அது கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. ஆனால், 1979-லும் 1990-லும் பெருவெள்ளம் வந்தது. 1979-லே வந்த வெள்ளத்திலே தலைமதகு அடித்துக்கொண்டு போய்விட்டது. 1990-லே வந்த வெள்ளத்தில் மணல் போக்கி இரண்டும் அடிக்கப்பட்டு, வலக்கரை 100 மீட்டர் அரிக்கப்பட்டுவிட்டது. எனவே, அவையெல்லாம் பழுது பார்க்கப்படுமா என்பதுதான் இந்தக் கேள்வியினுடைய உட்கருத்தாக இருக்கும் என்று கருதுகிறேன். அவை குறித்து பொறியாளர்கள் ஒரு எஸ்டிமேட் தயார் செய்து கொண்டு இருக்கிறார்கள். அது சீஃப் என்ஜினியர் அளவில் இருக்கிறது. அது இன்னும் அரசுக்கு வரவில்லை; அரசுக்கு வந்தவுடன் நிரந்தரமாக பழுதைப் பார்ப்பதற்கு இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

திரு. எல். சந்தானம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியதுபோல, அந்த அணை கட்டி முடிக்கப்பட்டு உடைப்பு ஏற்பட்ட காரணத்தினால், அது முழுவதுமாக பழுது அடைந்துவிட்ட காரணத்தினால்தான், அதற்கு பெரிய தொகை செலவழித்து சீர் செய்ய வேண்டிய நிலை இருக்கின்ற காரணத்தினால், அதை அந்த அளவிற்குக் கட்டி முடிக்கப்படுமா என்கின்ற வினாவை நான் எழுப்பி இருந்தேன். அதற்கு ஆய்வு நடந்து கொண்டிருக்கிறது; சீஃப் என்ஜினியர் லெவலில் எஸ்டிமேட் தயார் செய்யப்பட்டு கொண்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். அது எப்போது முழுவதும் முடிக்கப்படும்? அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்கள் எல்லாம் தங்கள் விவசாயம் பாதிக்கப்பட்டுவிட்ட காரணத்தினால் மற்ற இடங்களுக்குச் சென்று வேலை தேடுகின்ற அவலமான நிலையிலே இருக்கிறார்கள். அந்தப் பகுதி எங்களுடைய தேசியத் தலைவர் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுடைய தொகுதி. அதேபோல, இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற நமது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய தொகுதி என்கின்ற காரணத்தினால், அது எவ்வளவு விரைவாக முடிக்கப்படும் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணையினுடைய தலைமதகு 1979 ஆம் ஆண்டு வெள்ளத்திலே அடித்துக்கொண்டு போய்விட்டாலும் அதற்கு மாற்று ஏற்பாடாக பக்கத்தில் நாராயண காவேரி என்ற ஒரு வாய்க்கால் ஓடுகிறது; அந்த வாய்க்காலுக்கு திருப்பித்தான் தண்ணீர் விடுகிறோம். 1979-லிருந்து 1984 வரையில் அந்த நாராயண காவேரி வாய்க்கால்

1997 மார்ச் 13]

மூலமாக தண்ணீர் விட்டுக் கொண்டு இருந்தோம். 1985 ஆம் ஆண்டு என்ன செய்தார்கள் என்றால், அணையிலிருந்து 150 கிலோ மீட்டர் தள்ளி 2 1/2 லட்சம் ரூபாயில் மதகு ஒன்று நாராயண காவேரி வாய்க்காலிலே கட்டி இருக்கிறார்கள். அதன் மூலமாக பாசனத்தை இப்போது செய்துகொண்டு இருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தது போல, 34 குளங்கள் மூலம் 4789 ஏக்கர் பாய வேண்டிய இடத்தில், 2000 ஏக்கர் தான் பாய்கிறது. குறிப்பாக முதுகுளத்தூர் கண்மாய், கமுதி கண்மாய், இடைச்சி ஊரணி, மாறன் குளம்—இந்தப் பகுதிகளிலே மட்டும் தான் தண்ணீர் பாய்கிறது என்பது எனக்குத் தெரியும். எனவே, அரசு இது குறித்து நடவடிக்கை எடுக்கிறது.

மேலும் உறுப்பினருக்கு ஒரு தகவல் சொல்கிறேன். நாராயண காவேரி கால்வாயிலும் இந்த 34 ஏரிகளிலும் தூர் வாரி செப்பனிடுவதற்காக 4 கோடியே 55 லட்சம் ரூபாய்க்கு ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் அரசின் கையில் இருக்கிறது. அது உலக வங்கியின் உதவியோடு செய்யப்படும்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சோ. பாலகிருஷ்ணன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது என்னுடைய தொகுதியைச் சார்ந்தது என்கின்ற முறையில் இந்தக் கேள்வியைக் கேட்டதற்காக மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மண்டலமாணிக்கம் அணைக்கட்டு என்பது, எத்தனை தடவை கட்டினாலும் திரும்பத் திரும்ப அது உடைத்துக்கொண்டுதான் போகும். காரணம், ஏராளமான தண்ணீர் வெள்ள நேரத்தில் வந்து, ஒவ்வொரு தடவையும் அடித்துக் கொண்டு போய்விடும். ஆகவே அதற்கு முயற்சி செய்வதைவிட, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, நாராயண காவேரி என்ற அந்த 4.5 கோடி ரூபாய்த் திட்டத்தை விரைவில் நிறைவேற்றுவதன்மூலம், அந்தப் பகுதியில் 50 கிராமங்களுக்கும் மற்றும் உள்ள கண்மாய்களுக்கும் தண்ணீர் கிடைக்க ஒரு நல்ல வாய்ப்பு ஏற்படும் என்பதால், அந்த நாராயண காவேரித் திட்டத்தை விரைவில் செயல்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்வதைப்போல, அதை எத்தனைமுறை கட்டினாலும் அது

உடைந்துவிட வாய்ப்பு உண்டு. காரணம் தண்ணீருடைய வேகம் வலது கரையில் வந்துதான் அடிக்கிறது. ஆகவே வலது கரையில்தான் உடைப்பு ஏற்படுகிறது. தலைமதகும் வலக்கரையில்தான் இருக்கிறது. எனவே, இடது கரை மண் மேடிட்டுப் போய் இருக்கிறது. எனவே ஆற்றின் போக்கு, நீரின் வேகம், அதன் தாக்கம் வலது கரையிலேதான் இருக்கிறது. இருந்தாலும், அதையும் சீர் செய்துகொண்டு, நாராயண காவேரியையும், 34 கண்மாய்களையும், கிளை வாய்க்கால்களையும் சரிசெய்தால், கிட்டத்தட்ட ஐந்தாயிரம் ஏக்கர்களுக்குப் பாசனத்திற்கு வழி ஏற்படும். சமீபத்தில்கூட நான் அங்கே போய்ப் பார்த்துவிட்டு வந்தேன். ஆகவே, அரசு அதுகுறித்து விரைந்து நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 191, திரு. வி. கோவிந்தன், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

191—

பேரணாம்பட்டு தொகுதியில் மேம்பாலம் கட்டுதல்

*** 261—திரு. வி. கோவிந்தன் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதி, மலட்டாற்றில் மதினாபல்லியில் மேம்பாலம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. கோவிந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டு நகரத்திற்குத் தெற்குப் பகுதியில் மதினாபல்லி என்ற இடத்தில் மலட்டாறு ஓடுகிறது. மழைக்காலங்களில் பெருவெள்ளம் ஏற்பட்டு, போக்குவரத்து பாதிக்கப்பட்டு, அதனால் ஆம்பூர், வாணியம்பாடி செல்கின்ற கல்லூரி மாணவர்கள், தோல் தொழிற்சாலையில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள், அரசு அலுவலர்கள் போன்றவர்கள் தங்களுடைய பணிக்குச் செல்வதற்கு மிகவும் அவதிப்படுகிறார்கள். அந்தப் பகுதி மழைக்காலங்களில் தீவு